Stadt Zürich
Umwelt- und
Gesundheitsschutz

# மூட்டைப் பூச்சி

மூட்டைப் பூச்சிகள் (Cimex lectularius) உலகம் முழுவதும் வேகமாகப் பரவி வருகின்றன. இது பொதுவாக உபயோகிக்கியப்பட்ட பழைய கட்டில்கள் மற்றும் மரச்சாமான்கள் வழியாக பரவுகிறது. இது இரவில் மனிதர்கள் மற்றும் விலங்குகளிடமிருந்து இரத்தத்தை உறிஞ்சும். பகல் வேளையில் அவை படுக்கைக்கு அருகில் உள்ள மரச்சாமான்கள் அல்லது மரச்சட்டங்களின் கீழ் அல்லது மெத்தையின் இருண்ட விரிசல்களில் மறைகின்றன. மூட்டைப் பூச்சிகளுக்கும் சுகாதாரமற்ற நிலைமைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை; யார் வேண்டுமானாலும் பாதிக்கப்படலாம். மூட்டைப்பூச்சிகள் பரவினால், தொழில்முறை பூச்சி கட்டுப்பாடு மட்டுமே உதவும்.

தோற்றம்

– முழுமையாக வளரும் போது மூட்டைப்பூச்சி சுமார் 4 - 6 மிமீ நீளம் மற்றும் தட்டையாக இருக்கும், மற்றும் முழுமையாக இரத்தத்தை உறிஞ்சியப் பிறகு, கிட்டத்தட்ட 10 மிமீ நீளம் மற்றும் சிவப்பு பழுப்பு நிறத்தில் இருக்கும்.
– இளம் மூட்டைப் பூச்சிகள் சிறியதாகவும் வெளிர் நிறத்திலும் இருக்கும்.




இரத்த உணவை உண்ணும் வயதுவந்த மூட்டைப் பூச்சி.
புகைப்படம்: சூரிச் நகரம், UGZ

முக்கியத்துவம் மற்றும் வாழ்க்கை முறை

– மக்கள் மற்றும் செல்லப்பிராணிகளின் இரத்தத்தை குறிப்பாக இரவில்.உறிஞ்சும்.
– படுக்கைகள், தளபாடங்கள் மற்றும் அறைகளில் உள்ள விரிசல்களில் பகலில் மறைக்கப்படுகிறது.
– ஒரு அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து அடுத்த அடுக்குமாடி குடியிருப்பிற்கு செல்ல கூடும், எ.கா. பூச்சி கொல்லி ஸ்ப்ரேக்களால் அவற்றை எதிர்த்துப் போராட முயற்சிக்கும் போது.
– பெண் மூட்டைப்பூச்சி 500 முட்டைகள் வரை இடும்.
– நீண்ட காலத்திற்கு குளிரைத் தாங்கி 6 மாதங்கள் வரை பட்டினி கிடக்க இவற்றால் முடியும்.
– சுமார் 1 வருடம் வாழ்கிறது.

கெடுதி

- மறைக்கப்படாத உடம்புப் பகுதிகளில் (கழுத்து, முகம், கைகள், கணுக்கால் போன்றபகுதிகளில்) இரவில் கடிக்கும்.
- கடித்த சில மணிநேரங்கள் அல்லது நாட்களுக்குப் பிறகு மட்டுமே அரிப்பு போன்ற தோல் எதிர்வினைகள்  ஏற்படும்.
- மக்கள்தொகையில் சுமார் 20% பேர்களுக்கு மூட்டைப் பூச்சி கடித்தால் தோல் எதிர்வினைகள் ஏற்படவில்லை.
- இன்றுவரை, மூட்டைப் பூச்சிகள் மூலம் நோய்கள் பரவுவதாகத் தெரியவில்லை.




மூட்டைப் பூச்சி வாழ்க்கை சுழற்சி. படம்: மூட்டைப் பூச்சிகள் நிறுவனம்

கட்டுப்படுத்தல்

- மூட்டைப் பூச்சிகள் உண்மையில் கண்டுபிடிக்கப்பட்டால் மட்டுமே அவற்றை அழிக்க போராடுங்கள்.
- பூச்சிக்கொல்லி தெளிப்பை பயன்படுத்தி நீங்களே அவற்றை எதிர்த்துப் போராட முயற்சிக்காதீர்கள்**,** இது மூட்டைப்பூச்சிகளை பயமுறுத்துகிறது மற்றும் இதனால் அவை அபார்ட்மெண்ட் அல்லது வீடு முழுவதும் பரவுகின்றன**.**.
- அரசாங்க தொழில்முறை அடையாள சான்றிதழுடன்  தொழில்முறை பூச்சி கட்டுப்பாடு மூலம் மட்டுமே செய்யலாம்.
- முழுமையாக ஒழிப்பதே இலக்காக இருக்க வேண்டும்.
- பெரும்பாலான சந்தர்ப்பங்களில், ஒன்றுக்கு மேற்பட்ட பூச்சிக்கொல்லி தீர்வு தேவைப்படுகிறது. மாற்று முறைகள்: வெப்பத்தின் மூலம் அல்லது குளிர் மூலம்நடவடிக்கைகள், சிலிக்கா துகள்கள், நீராவி மூலம் தீர்வுகள்.
- நடவடிக்கைகள் மீண்டும் மூட்டைப்பூச்சிகள் வீட்டிற்குள் நுழைவதற்கு எதிராக பாதுகாக்காது**..**

முன்னேற்பாடாக தடுப்பு

- பயன்படுத்திய படுக்கைகள் மற்றும் மரச்சாமான்கள், பூச்சிகள், மலம் அல்லது இரத்தத்தின் தடயங்கள் உள்ளதா என சரிபார்க்கவும்.
- இடமாற்றத்தின் பொது பயன்படுத்தப்பட்ட அட்டைப்பெட்டிகளில் மூட்டைப் பூச்சிகள் பரவித் தாக்கலாம்.
- பிறர் உபயோகித்த ஆடைகளை 60 °C வெப்பநிலையில் துவைக்கவும் அல்லது 45 °C வெப்பநிலையில் உலர வைக்கவும்.
- உங்களுக்கு மூட்டைப்பூச்சி தொல்லை இருந்தால், அக்கம்பக்கத்தினருக்கும் மூட்டைப் பூச்சிகள் வராமல் இருக்க, படிக்கட்டு, அடித்தளம் அல்லது கட்டட மேல்தளப் பகுதியில் வைக்க வேண்டாம்.
- மரச்சாமான்களை அப்புறப்படுத்தும் போது, தயவு செய்து அதில் மூட்டைப் பூச்சிகள் உள்ளதாகத் தெளிவாகக் குறிக்கவும் அல்லது பயன்படுத்த முடியாததாக மாற்றவும், இதன் மூலம், மற்றவர்கள் மரச்சாமான்கள் மற்றும் மூட்டைப் பூச்சிகளை வீட்டிற்கு எடுத்துச் செல்ல மாட்டார்கள்.
- நீங்கள் உறவினர்கள் அல்லது நண்பர்களுடன் தங்கினால்**,** உங்கள் சாமான்களில் மூட்டைப் பூச்சிகள் எதுவும் கொண்டு போகாமல் இருப்பதில் கவனமாக இருங்கள்**..**
- ஹோட்டல் அறை அல்லது விடுமுறை அபார்ட்மெண்டிற்குச் செல்லும்போது, வலிமை வாய்ந்த ஃப்ளாஷ் லைட்டைப் பயன்படுத்தி, படுக்கை சட்டகம் மற்றும் மரச் சட்டகத்தில் உயிரோடிருக்கும் மூட்டைப் பூச்சிகள் அல்லது மலத்தின் தடயங்கள்  இருக்கின்றதா என்று தேடுங்கள் (அடுத்த நெடுவரிசையில் உள்ள படத்தைப் பார்க்கவும்).

மூட்டைப் பூச்சி தொற்றை எவ்வாறு கண்டுப்பிடிப்பது **?**

- படுக்கை சட்டத்தில் மற்றும் படுக்கைக்கு அருகிலுள்ள விரிசல்களில் பகலில் மறைந்திருக்கின்றன.
- மலம், சிறிய கருப்பு புள்ளிகள் (அடுத்த நெடுவரிசையில் உள்ள படத்தைப் பார்க்கவும்) அல்லது படுக்கை துணியில் இரத்தத்தின் தடயங்கள்
- மூட்டைப் பூச்சியைத்தேடும் மோப்ப நாய்களுடன் வீட்டைத் தேடுவது மிகவும்

திறமையான மற்றும் மலிவான தீர்வுகளுக்கு வழிவகுக்கும்.

உங்கள் ஹோட்டல் அறையில் மூட்டைப் பூச்சிகள் இருந்தால் என்ன செய்வது**?**

– ஹோட்டல் மேலாளர்களுக்கு தெரிவிக்கவும்.
– முடிந்த அளவுக்கு, அதற்கு அருகேயில்லாத மற்றொரு அறையைக் கோருங்கள்.
– உங்கள் சூட்கேஸை படுக்கையில் இருந்து முடிந்தவரை தொலைவில் வைக்கவும் மற்றும் அனைத்து ஜிப்பர்களையும் மூடவும்.



மூட்டைப்பூச்சிகள் அதிகமாக பரவியுள்ள ஒடுங்கிய மரக்கட்டை கட்டத்தில் பூச்சி எச்சங்கள்.
புகைப்படம்: சூரிச் நகரம், UGZ

மூட்டைப் பூச்சிகள் நிறைந்த அறையில் இரவைக் கழித்த பிறகு என்ன செய்வது**?**

– பால்கனியில் உங்கள் சாமான்களை வெளியே எடுக்கவும்.
– உடனே துணிகளை சலவை செய்ய முடியாவிட்டால், துணிமணிகளை டேப்பால் இறுக்கமாக கட்டி, கழிவுப் பைகளில் இத்துணிகளைச் சேமிக்கவும்.
– சலவைத்துணிகளை உடனடியாக 60 °C வெப்பநிலையில் 30 நிமிடங்கள் அல்லது தொடர்ச்சியாக இரண்டு முறை 40 °C வெப்பநிலையில் துவைக்கவும்.
– 45 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் டம்ளரில் 30 நிமிடங்கள்
– பல நாட்களுக்கு -17 ° C இல் குளிரூட்டப்பட்ட நிலையில் உறைவிப்பானில்.
– வெற்று சூட்கேஸ்கள்/பைகளில் பூச்சிக்கொல்லி தெளிப்புடன் நேரடியாக உள்ளேயும் வெளியேயும் தெளிக்கவும். பின்னர் அதை வீட்டின் அடித்தளத்திலோ அல்லது பால்கனியிலோ நன்றாக காற்றோட்டத்தில் வைக்கவும்.

சட்ட நிலைமை
ஒருவர் ஒரு நிறுவனத்திற்கு தனிபொறுப்பை அளித்து ஆர்டர் செய்தால், அவர் பொதுவாக செலவுகளையும் ஈடுகட்ட வேண்டும். வீட்டின் சொந்தக் காரர் பூச்சிகள் இல்லாத வாடகைக்கு விட வேண்டும் (சுவிஸ் கடமை சட்டத்தை (OR) பார்க்கவும் , குறிப்பாக வாடகை உரிமைச் சட்டம் மற்றும் " பொது சுகாதாரம் மற்றும் குடியிருப்பு சுகாதாரம் பற்றிய சுவிஸ் கன்டோனல் ஒழுங்குமுறை" ஆகியவற்றின் படி).. நீங்கள் ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் செல்லும்போது பூச்சிகள் இருந்தால், இது வாடகை சொத்தில் உள்ள குறைபாடாகக் கருதப்படுகிறது. இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் பொறுப்பு வாடகைக்கு விடுபவருக்கு உண்டு. செலவுகளை வெறுமனே வாடகைக்கு குடியிருப்போர்கு அனுப்ப முடியாது. குடியிருப்பு சொத்துக்களில் உள்ள சட்ட நிலைமையானது சுவிஸ் கடமை சட்டத்தில் (OR) , பிரிவுகள் 256, 257f, g, h, 258 மற்றும் 259 இல் கட்டுப்படுத்தப்படுகிறது.

நாங்கள் உங்களுக்கு தொடர்ந்து உதவுவோம் உறுதிப்படுத்திக்கொள்வதற்காக, எங்களை அழைக்கவும், அல்லது பூச்சிகளை எங்களிடம் அனுப்பவும் அல்லது கொண்டு வரவும். எங்கள் ஆலோசனை இலவசம் மற்றும் சூரிச் நகரவாசிகளுக்கு மட்டுமே. தொலைபேசி ஆலோசனை நேரம் திங்கள் முதல் வெள்ளி வரை, மதியம் 1:30 மணி முதல் 2:30 மணி வரை.

சூரிச் நகரம்
சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார பாதுகாப்பு
பூச்சி தடுப்பு துறை
ஏக்புயல்ட்ராஸ்ஸ 23
8050 சூரிச்
தொலைபேசி +41 44 412 28 38
ugz-schaedlingspraevention@zuerich.ch
stadt-zuerich.ch/schaedlingspraevention

Stadt Zürich
Umwelt- und Gesundheitsschutz
Fachstelle Schädlingsprävention
Eggbühlstrasse 23
8050 Zürich
T +41 44 412 28 38
ugz-schaedlingspraevention@zuerich.ch
stadt-zuerich.ch/schaedlingspraevention